**பலாகல பிரதேச சபை**
**அநுராதபுர மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 15 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 23 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆகஸ்ட் 31 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பலாகல பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்குரிய எனினும் 2016 ஆம் ஆண்டின் போது தீர்வுசெய்யப்படாதிருந்த ரூபா 159,320 தொகையான செலவினம் மீளாய்வாண்டின் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்த 8 வாகனங்களுக்காக செலுத்த வேண்டிய ரூபா 51,300 ஆன வருமான அனுமதிப்பத்திர கட்டணங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்காக 05 தொடர்பாடல் கோபுரங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 93,000 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபை பெயரில் பதிவு உரித்து கையேற்கப்படாத ரூபா 5,644,580 தொகையான மூன்று வாகனங்கள் நிலையான சொத்துக்களாக மோட்டார் வாகனங்கள் மற்றும் வண்டில்கள் கணக்கிற்கு உள்ளடக்கப்பட்டிருந்தன.

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது செயற்பாட்டு மிகை ரூபா 4,104,194 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செயற்பாட்டு மிகை ரூபா 2,238,943 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வீத வரி

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள அபிவிருத்தி அடைந்துள்ள பகுதிகளை இனங்கண்டு வீதவரி வருமானத்தை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 குத்தகை வாடகை

2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளுக்குரிய கிடைக்கவேண்டிய ரூபா 99,100 தொகையான நிலுவை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 நீதிமன்ற தண்டப்பணம்

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 4,393,718 ஆன நீதிமன்ற தண்டப்பண வருமானத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு தொடர்பாக சபைக்கு அறவிடப்பட வேண்டிய முத்திரைக் கட்டண வருமானங்களை இனங்கண்டு கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் 2014 இறுதியில் நிலுவையாக காணப்படும் ரூபா 687,975 ஆன முத்திரைக் கட்டண வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 ஏனைய வருமானம்

4 தொடர்பாடல் கோபுரங்களுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 90,000 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 அதிகாரம் பெறப்பாடத கொடுக்கல் வாங்கல்கள்

மீளாய்வாண்டில் 20 நாட்குறிப்புக்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 64,116,566 தொகையான பேரேட்டுக் கணக்கிற்கிடையே சீராக்கங்களுக்குரிய முறையான அங்கீகாரமொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவ திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையின் பெயரில் பதிவு உரித்தை கையளிக்காத மற்றும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டிற்கு உள்ளடக்கப்படாதிருந்த ரூபா 13,460,316 தொகையான 04 வாகனங்கள் சபையின் நாளாந்த நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தன.

(ஆ) பெறவேண்டிய கணக்குகளில் காண்பிக்கப்பட்ட 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் செயற்படுத்தப்பட்ட 06 கிராம எழுச்சி அபிவிருத்தி திட்டங்களுக்குரிய ரூபா 499,099 தொகையை நிச்சியமாக இனங்கண்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) செலுத்த வேண்டிய கணக்குகளில் காண்பிக்கப்பட்ட 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் செயற்படுத்தப்பட்ட 11 பல்வேறு செயற்திட்டங்களுக்குரிய ரூபா 602,477 ஆன செலுத்த வேண்டிய தொகையை மீளாய்வாண்டிலும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) 127 பிரிவின் பிரகாரம் எந்தவொரு செலவின வரையரை எல்லையை மிகைத்து சென்றால் குறைநிரப்பு செலவின வரையரைக்காக சபையின் முழு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், ரூபா 4,665,000 தொகை அங்கீகாரமொன்று இல்லாமல் செலவினத் தலைப்பிற்கு இடையே மாற்றப்பட்டிருந்தது.

(உ) (அதிகாரம் 203) மோட்டார் போக்குவரத்து சட்டத்தின் 2(1) பிரிவின் பிரகாரம் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்யப்படாமல் வாகனங்களை

பயன்படுத்த முடியாத போதிலும், சபையினால் அதற்கு புறம்பாக நடவடிக்கை எடுத்து இரண்டு வாகனங்கள் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

### 3.3 செயற்திட்ட தாமதம்

2015 பிரதேச சபைகளை பலப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்படுத்துவதன் கீழ் ரூபா 6,547,207 தொகை கிடைக்கப்பெற்றிருந்ததுடன் 2015 ஆம் ஆண்டின் இறுதியில் சமர்ப்பிக்கப்பட்ட செயனன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட 22 செயற்திட்டங்களின் வேலை நிறைவு பெற்றுள்ளதாக பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், ரூபா 4,170,000 தொகையான 7 செயற்திட்டங்களின் வேலைகள் 2016 மார்ச் 28 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்ப்பபட்டிருக்கவில்லை.

### 3.4 ஒப்பந்த நிர்வாகம்

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் 2014 இன் கீழ் 07 வீதிகளுக்கு குருணிக்கல் இட்டு புனரமைப்பதற்கு பிரதேசத்தின் 5 சமூக அமைப்புக்களுடன் உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அந்த உடன்படிக்கையின் பிரகாரம் அந்த நிர்மாணம் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முன்னைய வேலைகளை பூர்த்தி செய்து சபைக்கு கையளிக்க இணங்கிய போதிலும், உடன்படிக்கையின் பிரகாரம் வேலையை பூர்த்தி செய்து கையளிக்காமை தொடர்பாக ஒப்பந்த உடன்படிக்கையின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் தாமதக் கட்டணங்களாக ரூபா 264,165 ஆன தொகை ஒப்பந்தக்காரரிடமிருந்து அறவிடுவதற்கு சபை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்